# 2023
## வருடாந்த அறிக்கை

# இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி

சுற்றாடல் அமைச்சு

## பொருளடக்கம்


1. பணிப்பாளர் சபை ---------------------------------------------------------------------------------------------------- 43

1.1 பணிக் குழு ---------------------------------------------------------------------------------------------------- - 44

2. அறிமுகம் ---------------------------------------------------------------------------------------------------- 45

2.1 தூர நோக்கு ---------------------------------------------------------------------------------------------------- 45

2.2 பணி நோக்கு ---------------------------------------------------------------------------------------------------- 45

2.3 நிறுவன ரீதியான நோக்கங்கள் ------------------------------------------------------------------------------- 45

3. இலங்கை காலநிலை நிதியத்தின் பங்களிப்பு ----------------------------------------------------------------- 47

4. நிறுவனத்தின் பயணப் போக்கு -------------------------------------------------------------------------------- 51

5. சேவைகள் ---------------------------------------------------------------------------------------------------- 52

5.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு ------------------------------------------------------------------------------ 53

5.1.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்புப் பிரிவின் வருடாந்த விருத்தி - 2023 ------------------------- - 54

5.2 இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டம் (SLCCS) ------------------------------------------- - 55

5.2.1 இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டத்தின் வருடாந்த விருத்தி --------------------- - 55

5.3 தூய்மை விருத்திப் பொறிமுறை (CDM) ----------------------------------------------------------------- 56

5.3.1 தூய்மை அபிவிருத்தி பொறிமுறையின் வருடாந்த விருத்தி ----------------------------------- - 56

5.4 நிகர பூச்சிய வலுச் சக்தி சான்றுபடுத்துகை (Net Zero Energy) --------------------------------------- 57

5.5 காலநிலை சாதகமான சான்றுபுடுத்துகை (Climate Positive Certification) ------------------------- 57

5.6 சுற்றாடல் மதியுறை சேவைகள் ------------------------------------------------------------------------------ 58

5.7 கருத்திட்ட நிதி முகாமைத்துவம் ------------------------------------------------------------------------ - 58

6. நிதி விருத்தி ---------------------------------------------------------------------------------------------------- 59

6.1 2023 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்று ----------------------------------------------- 59

6.2 2023 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டு காலப் பகுதிக்கான விபரமான வருமானக் கூற்று ---------------------------------------------------------------------------------------------------- 61

6.3 2023 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியிலிருந்த படியான உரிமம் மாற்றல் கூற்று ----------------------- - 62

6.4 2023 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருட காலப் பகுதிக்கான நிதியோட்டக் கூற்று --- 63

6.5 2023 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில்ருந்த படியான நிதிக் கூற்றுக்கான விபரமான குறிப்பு ------- 64

7. கணக்காய்வு அறிக்கை --------------------------------------------------------------------------------------- 70

# 01. பணிப்பாளர் சபை

## தலைவரின் மதிப்பீடு



2023 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கைக்கு செய்தியொன்றை முன் வைக்கக் கிடைத்தமை தொடர்பாக பெரு மகிழ்ச்சியடைவதுடன், குறித்த ஆண்டு காலப் பகுதியுடன் தொடர்புடையதாக இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பான மதிப்பீடும், உபாய வழி மதியுறைகளை செயற்படுத்தும் செயற்பாட்டின் நடப்பு நிலை தொடர்பாகவும் விளக்குதல் இவ் அறிக்கையின் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது.

பேண்தகு சுற்றுச் சூழலை நோக்கமாகக் கொண்டதாக அந் நோக்கத்தை எய்தும் பொருட்டு இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் பல்வேறுபட்ட கருத்திட்டங்களும், மதியுறை சேவைகளும் செயற்படுத்தப்பட்டிருப்பதுடன், அதற்கு நேரொத்ததாக அரச, பகுதி அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு ISO 14064 – 1:2018 மற்றும் ISO 14067:2018 ஆகிய ஒத்திசைவு சான்றிதழ்களை கையளிப்பதும் கம்பனியின் பொறுப்பாகக் காணப்படுகின்றது. தொடர்புடைய நிறுவனங்களினால் கணிப்பிடப்படுகின்ற பசுமை வீட்டு வாயு உமிழ்வை எமது நிறுவனம் உண்மைப்படுத்திய பிற்பாடே இச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றது.

"இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டம்" சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றங்கள் பிரிவின் நேரடி கண்காணிப்பு மற்றும் நிர்வாகத்தின் கீழ் இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் செயற்படுத்தப்படுகின்ற பசுமை இல்ல வாயு நிகழ்ச்சியாகக் காணப்படுகின்றது. இம் முன் மொழிவுத் திட்டமானது, பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைப்பதன் மூலம் நிதிப் பலன்களை எய்தும் பொருட்டு 2016 ஆம் ஆண்டில் நிலை நாட்டப்பட்டது.

இலங்கையை சுற்றுச் சூழல் பாதுகாப்புள்ள நாடாக மாற்றும் பொருட்டும், சேவை பெறுநருக்கு தரமுயர்ந்த சேவையை வழங்கும் பொருட்டும் இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பாக நாம் பெறுமிதமடைகின்றோம்.

கம்பனியினால் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் கீழான சேவை சங்கிலித் தொடரை தொடர்ச்சியாகவும், நன்னெறி மிக்கதாகவும் பராமரிப்பதற்கும், சர்வதேச தராதரங்களின் பிரகாரம் வினைத் திறன் மிக்கதாகவும், தரமுயர்ந்த வகையிலும் அவற்றை செயற்படுத்தும் பொருட்டும் கம்பனியினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் பாராட்டத் தக்கவையாகக் காணப்படுகின்றன.

இலங்கை, பேண்தகு பொருளாதார நாட்டை நோக்கிப் பயணிக்கும் இத் தருவாயில் அந் நோக்கங்களை எய்தும் பொருட்டு பங்களிப்பை வழங்கிய வண்ணம் நீண்ட கால வாழ் தகவு நிலை ஊடாக முன்னோக்கி நகரக் கூடிய வாய்ப்பு கிடைக்குமெனும் சிறந்த நன்னெறியுடனும், நம்பிக்கையுடனும் நாம் செயற்படுகின்றோம். எதிர்வரும் காலப் பகுதியில் முகங் கொடுக்க வேண்டியேற்படுகின்ற பல்வேறு சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு மத்தியில் பின்னோக்கி நகராத முயற்சியுடனும், அர்ப்பணிப்புடனும் இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியை இலாபமீட்டக் கூடிய அரச நிறுவனமொன்றாக்குவதற்கு எம் வசமுள்ள தகைமை பெற்ற மானிட மூலதன் பெருமளவில் பங்களிப்பை வழங்குமென நான் நம்புகின்றேன்.



கலாநிதி பீ. எம். எஸ். பட்டகொட
திடல் நிபுணர்



திரு வெனுர பிரனாந்து
தலைவர்
மத்திய சுற்றாடல் அதிகார சபை



திருமதி என். ரீ. அமரதுங்க
பிரதிப் பணிப்பாளர்,
நிதி அமைத்து

## 1.1 பணிக் குழு

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி முறையே தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி, தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பமற்ற உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. தொழில்நுட்பக் குழு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் (SLAB) வழங்கப்பட்டுள்ள நிபுணத்துவத் தேவையை (ISO 14066) வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

## 02. அறிமுகம்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி, 2008 ஏப்ரல் 09 ஆம் திகதி கம்பனி இலக்கம் பீ வீ 63781 இன் கீழும் 2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் கீழும் நிலை நாட்டப்பட்ட அரசுக்கு உரித்தான கம்பனியொன்றாகக் காணப்படுவதுடன், 2020 செப்டம்பர் 25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் சுற்றாடல் அமைச்சின் விடயப் பரப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. கம்பனியின் ஊடாக அரச மற்றும் தனியார் பிரிவுகள் சார்ந்ததாகப் பல்வேறுபட்ட பேண்தகு சுற்றுச் சூழல் கருத்திட்டங்கள் உள் நாட்டு ரீதியாகவும், வெளி நாட்டு ரீதியாகவும் செயற்படுத்தப்படுகின்றது. ஆரம்பத்தில் இலங்கை காபன் நிதியம் (தனியார்) கம்பனி எனும் பெயரில் அழைக்கப்பட்டாலும், பிற்பாடு நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற பல்வேறு சுற்றாடல் சார்ந்த கருத்திட்டங்கள் தொடர்பாக கருத்திலெடுக்கப்பட்ட வண்ணம் அப் பணிகளை மென்மேலும் விரிவுபடுத்தும் பொருட்டு 2016 ஜனவரி 29 ஆந் திகதி தொட்டு இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி எனும் பெயரில் நிறுவனத்தின் பெயர் மாற்றத்துக்குள்ளாக்கப்பட்டது.

கம்பனியின் முன்னுரிமை மிக்க நோக்கமாக காபன் உமிழ்வைக் கணிப்பிடுவதன் ஊடாகக் குறை காபன் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு வழங்கும் செயற்பாடு காணப்படுகின்றது. மேலும், அரச மற்றும் தனியார்ப் பிரிவின் காபன் உமிழ்வு செயலாற்றுகையை வினைத் திறன் மிக்கதாக்கும் பொருட்டு வழிகாட்டும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளது.

### 2.1 தூர நோக்கு

காபன் பூச்சிய மற்றும் காலநிலையின் உண்மைத் தன்மையிலான பசுமை வீட்டு பொருளாதாரம்.

### 2.2 பணி நோக்கு

காபன் குறைந்த மற்றும் காலநிலையின் உண்மைத் தன்மையிலான பசுமை வீட்டு அபிவிருத்தி தொடர்பாக இலங்கையருக்கு உதவுதல்.

### 2.3 நிறுவன ரீதியான நோக்கங்கள்

I. ஐக்கிய நாடுகளின் காலநிலை மாறுபாடுகள் தொடர்பான சட்டக இணக்கப்பாடு (UNFCCC) மற்றும் கியோதோ இணக்கப்பாட்டில் (Kyoto Protocol) உள்ளடக்கப்பட்டுள்ள சுத்தப்படுத்துகை அபிவிருத்திப் பொறிமுறை (Clean Development Mechanism – CDM) உள்ளடங்களான செயற்பாடுகளை செயற்படுத்துதல்.

II. சுத்தப்படுத்துகை அபிவிருத்திப் பொறிமுறையுடன் தொடர்புடைய கருத்திட்டங்களை விருத்தி செய்யும் பொருட்டு தனியார், அரச மற்றும் அரச சார்பற்ற இயக்கங்களுக்கு மதியுறை சேவைகளை வழங்குதல், சுத்தப்படுத்துகை அபிவிருத்திப் பொறிமுறையுடன் தொடர்புடைய கருத்திட்டங்களை செல்லுபடியாக்கும் (Validation) மற்றும் உண்மைப்படுத்தும் (Verification) பொருட்டு தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு வசதிகளை செய்து கொடுத்தல் மற்றும் பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைப்பதற்கு உறுதுணையாக அமையக் கூடிய கருத்திட்டங்களுக்கு நிதி வளங்களை கையளித்தல்.

III. சுத்தப்படுத்துகை மேம்படுத்துகை பொறிமுறையின் கீழ் சான்றுபடுத்தப்பட்ட பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைத்தல் (Certified Emission Reduction - CER) மற்றும் தன்னிச்சையான பொறிமுறையின் (Voluntary Mechanism) மூலம் சான்றுபடுத்தப்பட்ட பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைத்தல் (Verified Emission Reduction) மற்றும் காபன் வர்த்தகம்.

IV. சுற்றாடல் மதிப்பீடு உட்பட சுற்றாடல் உற்பத்தி விற்பனை நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.

V. நிறுவன ரீதியான கருத்திட்டங்கள் மற்றும் உற்பத்தி மட்டத்திலான பசுமை வீட்டு வாயு உமிழ்வை அளவீடு செய்யும் பொருட்டும், உறுதிப்படுத்தும் பொருட்டும் செயற்படுதல்.

VI. சுற்றாடல் தராதர நிலைகளை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வு கூட வசதிகளை ஏற்பாடு செய்தல்.

VII. சுற்றாடல் சார் சுற்றுலாத் துறை உட்பட சுற்றாடல் உற்பத்தி விற்பனை நிகழ்ச்சிகளை விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.

VIII. உயிரியல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை (Bio – prospecting programme) விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.

IX. சுற்றாடல் நேயமிக்க கழிவகற்றல் நிகழ்ச்சிகளை விருத்தி செய்தல்.

X. வணிக ரீதியாக சாத்தியப்பாடுள்ள வைத்திய மற்றும் ஆபத்தான கழிவுகளை எரிக்கும் செயற்பாட்டை மேம்படுத்துதல் மற்றும் அவற்றைப் பராமரித்தல்.

XI. கருத்திட்ட விருத்தியாளர்களுக்குத் தேவையான எந்தவொரு உதவிச் சேவையையும் கையளித்தல்.

XII. சுற்றாடல் சார்ந்த உற்பத்திகள் மற்றும் சேவை மேம்படுத்துநர்களுக்கு நியாயமாக நிபந்தனைகளின் கீழ் நிதியுதவிகளை வழங்குதல்.

XIII. சுற்றாடல் சேவைகள் மற்றும் சுற்றாடல் மாசாக்கம் தொடர்பான பயன்படுத்துகை கட்டணத்தை அறவிடுதல் மற்றும் கிடைக்கின்ற நிதி சார் பலன்களின் ஊடாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற கைத்தொழிலாளர்கள் மற்றும் வர்த்தகக் குழுக்களுக்கு சுற்றுச் சூழல் சார் சேவைகளை கையளித்தல்.

XIV. பசுமை அறிக்கையிடல் (Green Reporting) செயற்பாட்டை விருத்தி செய்யும் பொருட்டு தனியார் நிறுவனங்களிற்கும், முகவராண்மை நிறுவனங்களிற்கும் உதவி வழங்குதல்.

XV. பேண்தகு அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக நிதியங்களை முதலீடு செய்தல்.

XVI. சுற்றாடலுடன் தொடர்புடைய எந்தவொரு வகையான சுற்றாடல் செயற்பாடுகளையும் செயற்படுத்துதல்.

XVII. இலங்கையை பசுமை பொருளாதாரம் (Green Economy) நோக்கி மாற்றீடு செய்யும் பொருட்டு தொடர்புடைய எந்தவொரு செயற் பணியையும் செயற்படுத்துதல்.

## 03. இலங்கை காலநிலை நிதியத்தின் பங்களிப்பு

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் நோக்கம் வணிகப் பொருளாதாரத்தில் காபனின் அளவை குறைக்கும் பொருட்டு வசதிகளை வழங்குவதாகக் காணப்படுகின்றது. காபனை குறைக்கும் பொருட்டு முன்னெடுக்கக் கூடிய தீர்வுகளை வினைத் திறன் மிக்கதாக மேலுயர்த்துவதும், புத்தாக்க உபாய வழிகள் தொடர்பாக ஆராய்வதும், காணப்படுகின்ற வசதிகளின் கீழ் காபன் உமிழ்வை நன்னெறிப்படுத்தும் முகமாக வழிகாட்டுவதும் எமது நிறுவனத்தின் செயற்பாடுகளாகக் காணப்படுகின்றது. அதன் பிரகாரம், தொழிற்சாலைகளின் சுற்றாடல் பாதச் சுவடிகளை குறைத்த வண்ணம் அந் நிறுவனங்களின் பேண்தகு வணிகப் பயன்பாடுகளை மேம்படுத்துவதற்கும், வர்த்தக நடவடிக்கைகளின் சுற்றாடல் சார் தராதர நிலைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்யப்படும்.

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் ISO 14064 – 1:2018 மற்றும் ISO 14067:2018 ஆகிய இசைவுச் சான்றிதழ்கள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வெளியிடப்படுகின்றன. நிறுவனத்தினால் கணிப்பிடப்படுகின்ற பசுமை வீட்டு வாயு உமிழ்வு விபரங்கள் கம்பனியினால் உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடு அச் சான்றிதழ்கள் கையளிக்கப்படுகின்றன. இலங்கை தராதர அங்கீகார சபையினால் மேற்குறித்த உறுதிப்படுத்துகை செயற்பாட்டை மேற்கொள்வதற்கு கம்பனிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதுடன், அது உள் நாட்டு ரீதியாகவும், வெளி நாட்டு ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி உள் நாட்டு வர்த்தக நிறுவனங்களுக்குத் தரமுயர்ந்த உறுதிப்படுத்துகை சேவைகளை வழங்கிய வண்ணம் உலகலாவிய காலநிலை செயற்பாடுகள் தொடர்பாக அதன் வெளிப்படைத் தம்மை மற்றும் பொறுப்புடைமை தொடர்பாக வெளிக் காட்டுவதற்கு வசதி வாய்ப்பு கிடைத்துள்ளது.

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றப் பிரிவின் நேரடி கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தேசிய பசுமை வீட்டு வாயு நிகழ்ச்சித் திட்டமாக இலங்கை காபன் கடன் பரிந்துறை திட்டம், கம்பனியின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது. இப் பிரேரணை திட்டத்தின் ஊடாக இலங்கையில் செயற்படுகின்ற தகைமை பெற்ற காபன் முகாமைத்துவக் கருத்திட்டங்கள் பதிவு செய்யப்படுவதுடன், எதிர்ப்பார் தரப்பினருக்கு தரமுயர்ந்த தன்மை உறுதிப்படுத்தப்பட்ட இலங்கைக்குரிய சான்றுபடுத்தப்பட்ட உமிழ்வைக் குறைக்கு (SCER) சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இலங்கை காபன் கடன் பரிந்துறை திட்டத்தின் மூலம் காபன் வர்த்தகத்துக்கான வசதிகளை முன்னெடுப்பதும், வணிக நடவடிக்கைகளுக்கு காபனை அகற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக முதலிடுவதற்கு வாய்ப்பு கிடைப்பதும், அவ் உமிழ்வைத் தீர்க்கும் பொருட்டு மேடையொன்றை உறுவாக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றது. இது சுற்றாடல் பொறுப்புடைமையை விஸ்தீரணப்படுத்தும் செயற்பாட்டுக்கு மேலதிகமாக, பேண்தகு எதிர்க் காலத்திற்கும் பங்களிப்பு செய்யும் செயற்பாடாகவும் சுட்டிக் காட்டலாம்.

இலங்கை காலநிலை நிதியத்தினால் புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டின் ஊடாக இலங்கையின் பசுமை வீட்டு வாயு உமிழ்வை குறைக்கும் பொருட்டு தூய்மை விருத்தி பொறிமுறையை பயன்படுத்துவதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல் மற்றும் இட வசதிகளை ஏற்பாடு செய்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும், இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் கருத்திட்ட திட்டமிடுகை ஆவணம் (PDD), மேற்பார்வை அறிக்கை (MR) தயாரிப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான சட்ட இணக்கப்பாட்டின் (UNFCCC) தூய்மை விருத்திப் பொறிமுறை (CMD) ஆகியவற்றின் கீழ் கருத்திட்டங்களைப் பதிவு செய்தல் மற்றும் சான்றுபடுத்தப்பட்ட உமிழ்வை குறைத்தல் (CER) ஆகியவற்றுக்கான சான்றிதழ் வெளியிடப்படுவதை அங்கீகரித்தல் மற்றும் உறுதிப்படுத்தும் செயற்பாடுகளுக்கு இட வசதிகள் ஏற்பாடு செய்யப்படும். அவ்வாறே, வலுச் சக்தி கணக்காய்வின் கீழ் துறை சார் நிபுணர்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களின் ஊடாக வலுச் சக்தி கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு அது சுற்றாடலுடன் தொடர்புபடும் விதம் தொடர்பாக விளக்கப்படுத்தி அதற்கென அந் நிறுவனங்கள் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் பரிந்துறைக்கப்பட்டு அவை ஊக்குவிக்கப்படும். காபன் குறை பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொருட்டு தீர்மானமெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவத்தை வழங்குவதும், மேலும் தேசிய பசுமை அறிக்கையிடல் தொகுதி (GR) தொடர்பாக மதியுறை சேவைகளை வழங்குவதும் இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் பல்வேறு சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான கருத்திட்டங்கள் மற்றும் நிதியங்கள் முகாமைத்துவப்படுத்தப்படுகின்றன. உலகலாவிய சுற்றாடல் வசதிகள் நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற நவீன உயிரியல் வலுச் சக்தி தொழில்நுட்ப கருத்திட்டங்களாக,

- பசுமை லங்கா
- தேசிய இயைபாக்கத் திட்டம்
- எதிர்ப்பார் தேசிய ரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பை அறிமுகப்படுத்தலாம்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி, தேசிய காலநிலைக்கு முகங் கொடுக்கும் திறன் தொடர்பான வழிகாட்டியாகவும் செயற்படுகின்றது. அவ்வாறே, முழு மொத்த குடி மக்களுக்கும் காலநிலை செயற்பாட்டின் பல் வகைமையைக் குறைக்கும் செயற்பாட்டிலிருந்து இயைபாக்கமடையும் செயற்பாடு வரை கம்பனியினால் வழங்கப்படுகின்ற சேவைகள் பரந்துபட்டவையாகக் காணப்படுகின்றன. இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் தலையாய செயற் பணிகளாக சுற்றாடல் நிபுணத்துவம் தொடர்பான வாடிக்கையாளர்களின் எதிர்ப்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் பொருட்டு அவ் இயக்கத்தினால் கருத்திட்டங்கள் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கப்படுகின்றது. அவ்வாறே, காலநிலை சார்ந்த சவால்களுக்கு எதிராக இலங்கை அரசு மற்றும் தனியார்ப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளுக்கும் உதவி வழங்குவதன் மூலம் மிக முக்கியமான பங்களிப்பை வழங்கிய வண்ணமுள்ளது.

2023 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பாக கம்பனியினால் பசுமை வீட்டு வாயு உமிழ்வை குறைக்கும் பொருட்டு சந்தையிலுள்ள பெயர் பெற்ற நிறுவனங்களுக்கு பசுமை வீட்டு உறுதிப்படுத்துகை சான்றிதழ்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட ஒரு சில சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், அவை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.



அரின்மா ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனம்
பசுமை வீட்டு வாயு சான்றுபடுத்துகை



ஹேலீஸ் பெப்ரிக் தனியார் நிறுவனம்
பசுமை வீட்டு வாயு சான்றுபடுத்துகை




ஹட்டன் நஷனல் வங்கி
பசுமை வீட்டு வாயு சான்றுபடுத்துகை



யுனிடீல் பெக்கேஜின்
பசுமை வீட்டு வாயு சான்றுபடுத்துகை

## 04. நிறுவனத்தின் பயணப் போக்கு



**2008**

சுற்றாடல் அமைச்சின் கீழ் இலங்கை காபன் நிதியம் நிலை நாட்டப்படுதல்

**2010**

சுத்தப்படுத்துகை அபிவிருத்திப் பொறிமுறை கருத்திட்டம் ஆரம்பிக்கப்படுதல்.

**2013**

இலங்கை காபன் கடன் முன் மொழிவு திட்டத்தின் கீழ் கருத்திட்டங்களை ஆரம்பித்தல். காலநிலை சார் கைத்தொழில்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக தன்னியக்க பசுமை வீட்டு வாயு அறிக்கையிடும் தராதரங்கள் மற்றும் தேவைகளை அறிமுகப்படுத்துதல்.

**2016**

இலங்கை காலநிலை நிதியம் தனியார் (கம்பனி) எனும் பெயரில் வர்த்தகப் பெயரை மாற்றியமைத்தல்.

**2016**

இலங்கை காபன் தராதர செயற்பாட்டுப் பொறிமுறையை மீள் கட்டமைத்தல்.

**2016**

இலங்கை தராதர அங்கீகார சபையிடமிருந்து ISO 14065 எனும் தராதர அங்கீகார சான்றிதழை பெற்றுக் கொள்ளுதல்.

**2018**

காலநிலை மாற்றங்கள் தொடர்பான மூன்றாவது தேசிய தொடர்பாடல் செயற்பாடு தொடர்பாக தேசிய பசுமை வீட்டு வாயுக்களை கணிப்பிடும் மற்றும் ஆவணப்படுத்தும் பொருட்டு கேந்திர நிலையமாக செயற்படுதல்.


**2020**

நிகர பூச்சிய வலுச் சக்தியை சான்றுபடுத்தும் மற்றும் காபன் நேரொத்தத் தொகுதியை அறிமுகப்படுத்துதல்.

**2023**

காபன் பாதச் சுவடி நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்துதல்

05. சேவைகள்


பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு
(ISO 14064, ISO 14067)
இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டம்
தூய்மை அபிவிருத்திப் பொறிமுறை
நிகர பூச்சிய வலுச் சக்தி (Net Zero Energy) சான்றுபடுத்துகை
දේශගුණික ධනාත්මක සහතිකකරණය
(Climate Positive Certification)
උපදේශන සේවාවන්
ව්‍යාපෘති මූල්‍ය කළමනාකරණය
වෙනත් සේවාවන් (කාබන් උදාසීන සහතිකකරණය, වැඩසටහන් සත්‍යාපනය, ශුද්ධ ශුන්‍ය සහතිකකරණය)

பேண்தகு சுற்றுச் சூழலை கட்டியெழுப்பும் பொருட்டு முன்னெடுக்கப்படுகின்ற கருத்திட்டங்களின் சான்றுபடுத்துகை மற்றும் அங்கீகாரத் தன்மை மற்றும் மதியுறை சேவைகளை வழங்குவதும் கம்பனியின் முன்னுரிமை மிக்க சேவையாகக் காணப்படுகின்றது. அதன் பிரகாரம், நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ள பிரதானமான சேவைகள் பின்வருமாறு,

- பசுமை வீட்டு வாயு சான்றுபடுத்துகை (ISO 14064) (ISO 14067)
- இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டம் (SLCCS)
- தூய்மை அபிவிருத்திப் பொறிமுறை (CDM)
- நிகர பூச்சிய (Net Zero Energy) வலுச் சக்தி சான்றுபடுத்துகை
- காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை (Climate Positive Certification)
- மதியுறை சேவைகள்
- கருத்திட்டங்கள் மற்றும் நிதி முகாமைத்துவக் கருத்திட்டங்களின் அறிமுகம்

## 5.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் அரச மற்றும் தனியார்ப் பிரிவு நிறுவனங்களுக்கு ISO 14064 – 1:2018 மற்றும் ISO 14067:2018 ஆகிய இசைவாக்க சான்றிதழ்கள் உள் நாட்டு மற்றும் வெளி நாட்டு நிறுவனங்களுக்கு கையளிக்கப்படுகின்றன. அந் நிறுவனங்களினால் கணிப்பிடப்படுகின்ற பசுமை வீட்டு வாயு உமிழ்வு அளவு தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடு அச் சான்றிதழ் கையளிக்கப்படுகின்றன. இலங்கை தராதர அங்கீகார சபையினால் மேற்குறித்த சான்றுபடுத்துகை செயன் முறை தொடர்பாக கம்பனிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பசுமை வீட்டு வாயு உமிழ்வை கணிப்பிடும் செயன் முறை வருடாந்தம் முன்னெடுக்கப்படுகின்ற செயன் முறையாகக் காணப்படுவதுடன், மூன்றாந் தரப்பு சான்றுபடுத்துகையின் மூலம் அந் நிறுவனத் தரவுகள் தொடர்பாக மதிப்பீடு வழங்கப்படும்.

### 5.1.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்புப் பிரிவின் வருடாந்த விருத்தி - 2023

| இலக்கம் | கருத்திட்டம் | விருத்தி |
|---|---|---|
| பசுமை வீட்டு வாயு உமிழ்வுக் கூற்றின் சான்றுபடுத்துகை - நிறுவன ரீதியான நிலை மட்டம் | | |
| 01 | இலங்கை புகையிலை கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 02 | கொமர்ஷல் வங்கி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 03 | அல்பிட்டிய பெருந்தோட்ட கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 04 | நோர் லங்கா தனியார் கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 05 | செலிங்கோ லைப் காப்புறுதி கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 06 | போட்பெக் தனியார் கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 07 | இலங்கை வங்கி - 2022 | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 08 | தலவாக்கலை ரீ எஸ்ரேட் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 09 | காகில்ஸ் கொலிட்டி கன்பெக்ஷனரி தனியார் கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 10 | ரெக்ஸ்ரிப் தனியார் கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 11 | சிட்டிசன்ஸ் டிவெலொப்மண்ட் நிதி நிறுவனம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 12 | காகில்ஸ் புட் தனியார் கம்பனி கம்பனி பீ. எல். சீ | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 13 | ஈ பீ கிரிசி அண்ட் கோபரேஷன் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 14 | சாலயிக் தனியார் கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 15 | பொகவந்தலாவ ரீ எஸ்ரேட் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 16 | ஹொரன பிளாண்டேஷன் பீ. எல். சீ | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 17 | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 18 | டில்மா சிலோன் ரீ நிறுவனம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 19 | மலிபன் பிஸ்கட் நிறுவனம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 20 | ஜெபர்ஜி பிரதர்ஸ் நிறுவனம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 21 | கொரியன் ஸ்பா அக்சசரீஸ் தனியார் கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 22 | நொரிட்டாகே போசிலேன் தனியார் கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 23 | குளோபல் சீ புட்ஸ் கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 24 | தேசிய அபிவிருத்தி வங்கி - 2022 | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 25 | அமர்சன் டிரேடின் தனியார் கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 26 | ரீசைக்கல் பிளஸ் தனியார் நிறுவனம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 27 | அட்டயர் தனியார் கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 28 | மாஸ் ஹோல்டிங்க்ஸ் - மாஸ் கெபிட்டல் தனியார் நிறுவனம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 29 | எம் ஜே இண்டர்னெஷனல் தனியார் கம்பனி | 10% நிறைவடைந்துள்ளது |
| 30 | மாஸ் கெபிட்டல் தனியார் நிறுவனம் | 10% நிறைவடைந்துள்ளது |
| 31 | திரீ ஷெல் பெப்ரிக் தனியார் கம்பனி | 20% நிறைவடைந்துள்ளது |
| 32 | ஸ்திரெஷ் லைன் தனியார் நிறுவனம் | 10% நிறைவடைந்துள்ளது |
| 33 | களனி வெலி பிளாண்டேஷன் தனியார் நிறுவனம் | 40% நிறைவடைந்துள்ளது |
| 34 | யுனிடீல் பெக்கேஜின் தனியார் நிறுவனம் | 30% நிறைவடைந்துள்ளது |
| 35 | காகில்ஸ் கொலிட்டி புட்ஸ் தனியார் நிறுவனம் | 10% நிறைவடைந்துள்ளது |
| 36 | எதி மலே பிளாண்டேஷன் | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 37 | லிங்க் நெச்சுரல் தனியார் நிறுவனம் | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 38 | சாலயிக் - யூ கே | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 39 | கொழும்பு பல்கலைக்கழகம் | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |

| | | |
|---|---|---|
| 40 | ஸ்கென்வெல் லொஜிஸ் ரிக் கழம்பு நிறுவனம் | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 41 | தேசிய அபிவிருத்தி வங்கி - 2023 | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 42 | ஹட்டன் நெஷனல் வங்கி | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 43 | கொமர்ஷல் வங்கி பீ எல் சீ | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 44 | இலங்கை வங்கி - 2023 | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 45 | போட்பெக் தனியார் நிறுவனம் | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 46 | நேச்சர்ஸ் பியுட்டி கிரியேஷன்ஸ் | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 47 | நொபெல்ஸ் வெயார் தனியார் நிறுவனம் | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 48 | ரைட் லைட் எக்ஸ்போட் தனியார் நிறுவனம் | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 49 | ரேயின் போச் பெஷன்ஸ் | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 50 | எல் ஓ எல் சீ ஹோல்டிங்ஸ் | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 51 | லங்கா ஐ ஓ சீ தனியார் பீ எல் சீ | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 52 | டிப்ட் பிரடக்ட் பீ எல் சீ | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 53 | லங்கெம் சிலோன் பீ எல் சீ | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 54 | நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 55 | ஹெட்ஸ் டார்ட் தனியார் நிறுவனம் | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 56 | சியாம் சிட்டி சிமெண்ட் லங்கா நிறுவனம் - இன்சீ | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 57 | நகர சபை - குளியாப்பிட்டி | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |
| 58 | ஆனந்த வித்தியாலயம் - மரதானை | ஒப்பந்த நிலையில் காணப்பட்டது |

## 5.2 இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டம் (SLCCS)

இலங்கை காபன் கடன் மொழிவுத் திட்டம் எனப்படுவது, இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றப் பிரிவின் நேரடி நேரடி மேற்பார்வையின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தேசிய பசுமை வீட்டு வாயு கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் மற்றும் சரி பார்க்கும் நிகழ்ச்சித் திட்டமாகக் காணப்படுகின்றது. இம் முன் மொழிவுத் திட்டத்தின் மூலம் இலங்கையில் செயற்படக் கூடிய தகைமை பெற்ற காபன் முகாமைத்துவக் கருத்திட்டங்கள் பதிவு செய்யப்படுவதுடன், எதிர்ப்பார் பங்குதாரிகளுக்கு தராதர நிலை உறுதிப்படுத்தப்பட்ட இலங்கையைச் சார்ந்த உமிழ்வு குறைப்பு சான்றிதழ் (SECR) வெளியிடப்படுகின்றது.

### 5.2.1 இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டத்தின் வருடாந்த விருத்தி

| இலக்கம் | கருத்திட்டம் | விருத்தி |
|---|---|---|
| இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டத்தின் வருடாந்த விருத்தி | | |
| 01 | போகோ பவர் தனியார் நிறுவனம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 02 | டில்மா ரீ தனியார் கம்பனி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 03 | வெவிலி தனியார் நிறுவனம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 04 | லங்கெம் சிலோன் பீ எல் சீ | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 05 | பொகவந்தலாவ ரீ எஸ் ரேட் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 06 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 07 | ஹொரன பிளாண்டேஷன் பீ எல் சீ | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| 08 | அனுனயின் ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டத்தின் கீழ் பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவிய கருத்திட்டங்கள் | | |
| 01 | தலவாகலை ரீ எஸ் ரேட் | பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றது |
| 02 | பொதட்டுவ தேயிலை தொழிற் சாலை | பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றது |
| 03 | யுனிடீல் பொதியிடல் தனியார் நிறுவனம் | பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றது |
| 04 | கே டீ ஈபர்ட் மற்றும் புத்ரயோ தனியார் நிறுவனம் | பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றது |
| 05 | எல் ஓ எல் சீ தனியார் நிறுவனம் | பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றது |
| 06 | ஹேயிலீஸ் - சோலார் | பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றது |
| 07 | டிப்ட் புரொடக்ட் பீ எல் சீ | பேச்சு வார்த்தை மட்டத்தில் நிலவுகின்றது |

## 5.3 தூய்மை விருத்திப் பொறிமுறை (CDM)

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டின் ஊடாக இலங்கையில் பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைக்கும் முகமாக தூய்மை விருத்திப் பொறிமுறையை பயன்படுத்துவதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் மற்றும் தேவையான வசதிகளை ஒழுங்கு செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான சட்டக கூட்டிணைப்பின் (UNFCCC) சுத்தப்படுத்துகை விருத்தி பொறிமுறையின் (CDM) கீழ் கருத்திட்டங்களை பதிவு செய்தல் மற்றும் சான்றுபடுத்தப்பட்ட வாயு உமிழ்வைக் குறைக்கும் (CER) சான்றிதழை வெளியிடும் பொருட்டு சான்றுபடுத்துதல் மற்றும் சரி பார்க்கை செயற்பாடுகளுடன் தொடர்புடைய வசதிகள் ஒழுங்கு செய்யப்படும். மேலும், இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் கருத்திட்டத் திட்டங்கள் தொடர்பான ஆவணம் (PDD) மற்றும் மேற்பார்வை அறிக்கை (MR) ஆகியவற்றின் தயாரிப்பு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

### 5.3.1 தூய்மை அபிவிருத்தி பொறிமுறையன் வருடாந்த விருத்தி

| இலக்கம் | கருத்திட்டம் | விருத்தி |
|---|---|---|
| தூய்மை அபிவிருத்தி பொறிமுறையன் வருடாந்த விருத்தி | | |
| 01 | சிறு அளவிலான நீர் மின் கருத்திட்டம் | ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான சட்டக இணக்கப்பாட்டுக்கு (UNFCCC) மேற்பார்வை அறிக்கைகள் (MR) முன் வைக்கப்பட்டுள்ளன. |
| 02 | புதலாவத்த கருத்திட்டம் | |
| 03 | மஸ்கெலிய ஓய கருத்திட்டம் | |
| 04 | தம்புலு ஓய கருத்திட்டம் | |
| 05 | மொரகல ஓய கருத்திட்டம் | |
| 06 | கோமலே ஓய கருத்திட்டம் | |

## 5.4 நிகர பூச்சிய வலுச் சக்தி சான்றுபடுத்துகை (Net Zero Energy)

நிகர பூச்சிய வலுச் சக்தி கோட்பாடு எனப்படுவது, வலுக் சக்தி பயன்பாட்டின் மூலம் வலுச் சக்தி பாதுகாப்பின் வினைத் திறன் மற்றும் அந் நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படுகின்ற புதுப்பிக்கத்தக்க தோற்றுவாயின் 100% எய்தப் பெறும் வகையில் அமையப் பெற்ற வலுச் சக்தி பயன்பாடாகக் காணப்படுகின்றது. வலுச் சக்தியை சான்றுபடுத்தும் தொகுதியானது, காபன் உமிழ்வைக் குறைத்தல், வலுச் சக்தி வினைத் திறன் தொழில் நுட்பம் தொடர்பாக ஊக்குவிப்பு மற்றும் நிறுவன ரீதியான விருத்தி செயன் முறைகளை வியாபிக்கச் செய்தல் ஆகிய நோக்கங்களை உள்ளடக்கிய இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் விருத்தி செய்யப்பட்ட கோட்பாடாகக் காணப்படுகின்றது.

புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டைத் தாண்டிய வகையிலான புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி உற்பத்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ள நிறுவனங்கள், நிகர பூச்சிய வலுச் சக்தி சான்றுபடுத்துகை தொடர்பாக தகைமை பெறுகின்றன. இச் சான்றுபடுத்துகையின் பலன்கள் முறையே,

- வலுச் சக்தி பயன்பாட்டின் மூலம் ஏற்படக் கூடிய பசுமை வீட்டு வாயு உமிழ்வை, புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டின் ஊடாக குறைக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தல்.
- நிறுவனங்களிற்கு, முதலீட்டாளர்களுக்கு மற்றும் பாவனையாளர்களுக்கு சுற்றாடல் நேயமிக்க கருத்திட்டங்களில் தலையிடுவதற்கு இட வசதிகள் கிடைத்தல்.
- புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி உற்பத்தியில் ஈடுபடுகின்ற நிறுவனங்களிற்கு, அவர்களது மேலதிக வலுச் சக்தியை விற்பனை செய்து மேலதிக வருமானத்தை ஈட்டக் கூடிய வாய்ப்பு கிடைத்தல்.
- புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டை விருத்தி செய்வதன் ஊடாக உற்பத்தி செலவைக் குறைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைத்தல் மற்றும் அந் நிறுவனங்களுக்கு நீண்ட கால போட்டித் தன்மையுள்ள சந்தையில் தங்கியிருக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தல்.
- உயிரியல் எரிபொருளின் கீழ் தங்கியுள்ள வலுச் சக்தி, மிக விரைவாக மாற்றமடையக் கூடிய விலை மற்றும் விநியோகிப்புடன் கூட்டிணைந்த சந்தை வசதியுள்ள வலுச் சக்தியின் கீழ் தங்கியிருக்கும் செயற்பாடு குறைவடைதல்.
- நாட்டினுள் அபிவிருத்தி தொடர்பாக போட்டித் தன்மையுள்ள பசுமை சுற்றாடல் உறுவாக்கப்படுதல் மற்றும் நீண்ட கால புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி கைத்தொழில் விஸ்தரிப்பு அதிகரித்தல்.

## 5.5 காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை (Climate Positive Certification)

காலநிலை சாதகமான சான்றுபடுத்துகையின் ஊடாக திடமான பொருளாதார விருத்தியை பேணுவதற்கும், குறிப்பிடத்தக்களவான உமிழ்வைக் குறைப்பதன் ஊடாக நீண்ட கால நன்னெறி மிக்க நிலைப்பாட்டை எட்டுவதற்கும் வழிகாட்டப்படுகின்றது. நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் சேவைகளின் வருடாந்த பசுமை வீட்டு வாயு உமிழ்வு சான்றுபடுத்துகையின் வாயிலாக அவற்றின் பசுமை வீட்டு வாயு உமிழ்வு தொடர்பான பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வாய்ப்பும் கிடைத்துள்ளது. மேலும். காலநிலை சாதகமான சான்றிதழை பெற்றுக் கொள்ளும் பொருட்டு நிறுவனத்தின் முன்னெடுப்பு செயற்பாடுகளின் பசுமை வீட்டு வாயு உமிழ்வு தொடர்பாக வருடாந்தம் அதிகளவில் கவனம் செலுத்துவதன் ஊடாக அவர்களது வருடாந்த பசுமை வீட்டு வாயு உமிழ்வு மற்றும் அவை சான்றுபடுத்தப்பட்ட பிற்பாடு மேலதிக அளவை விற்பனை செய்யக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும்.

இச் சான்றுபடுத்துகை தொடர்பில் தேவையான பிரதானமான இசைவாக்கங்கள்

- எதிர்ப்பார் அளவியல் ரீதியான பசுமை வீட்டு வாயு உமிழ்வு சான்றிதழ் (ஏற்றுக் கொள்ளப்பட்ட மூன்றாம் தரப்பினரினால் சரி செய்யப்பட்ட).
- எதிர்ப்பார் தரப்பினரினால் காபன் முகாமைத்துவ கருத்திட்டம் விருத்தி செய்யப்படுதல் மற்றும் அவர்களது பசுமை வீட்டு வாயு உமிழ்வை குறைக்கும் பொருட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச வாயு உமிழ்வு கருத்திட்டமயமாக்கம்.
- சான்றுபடுத்தப்பட்ட கருத்திட்டங்களை தன்னிச்சையாக செயற்படுத்த வேண்டியிருத்தல்.
- எதிர்ப்பார் தரப்பினர் அவர்களது பசுமை வீட்டு வாயு உமிழ்வை மேலதிக காபன் சார்ந்த கடனுடன் தீர்த்தல்
- காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை சார்ந்த துறைகள்
- புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி விருத்தி
- புதிய வன வளர்ப்புகளை செயற்படுத்துதல் மற்றும் மீள் வன வளர்ப்பு
- வலுச் சக்தி வினைத் திறன் மற்றும் பாதுகாப்பு
- வீண் விரயத்தை குறைத்தல், மீள் பயன்படுத்துதல் மற்றும் மீள் சுழற்சி

## 5.6 சுற்றாடல் மதியுறை சேவைகள்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் காபன் குறைவான பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொருட்டு வாடிக்கைகளர்களுக்கு தீர்மானமெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களும், தலைமைத்துவமும் மதியுறை சேவைகளின் ஊடாக வழங்கி வருகின்றது. மேலும், தேசிய பசுமை அறிக்கையிடல் தொகுதியில் பதிவு செய்வதற்கும் தேவையான மதியுறை சேவைகளும் வழங்கப்படுகின்றன.

## 5.7 கருத்திட்ட நிதி முகாமைத்துவம்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் பல்வேறு சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றங்களுடன் தொடர்புடைய கருத்திட்டங்கள் மற்றும் கருத்திட்ட நிதியங்கள் முகாமைத்துவப்படுத்தப்படுகின்றன. அத்தகைய அடிப்படையில் அமையப் பெற்ற ஒரு சில கருத்திட்டங்கள் பின்வருமாறு,

- உலகலாவிய சுற்றுச் சூழல் வசதிகள் நிதியத்தின் வாயிலாக செயற்படுத்தப்பட்ட நவீன உயிரியல் வலுச் சக்தி தொழில்நுட்பக் கருத்திட்டங்கள்
- பசுமை இலங்கை கருத்திட்டம்
- தேசிய இயைபாக்கத் திட்டம்
- எதிர்ப்பார் தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு
- இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் நிபுணத்துவ துறைகள்
- புதுப்பிக்கத்தக்க வலுச் சக்திகள்
- இசைவாக்கம் அல்லது குறைப்பதுடன் (Adaptation and Mitigation) தொடர்புடைய மதியுறைகளை வழங்குதல்
- சுற்றாடல் பொறியியலாக்கம்
- MRV தொகுதிகளின் மேம்படுத்துகை
- குடிகளின் விருத்தி
- சமூக ரீதியான ஆராய்ச்சிகள்

## 06. நிதி விருத்தி

### 6.1 2023 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்று

| இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி | | | | |
|---|---|---|---|---|
| 2023 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்று | | | | |
| | | 2023 | | 2022 |
| | குறிப்புகள் | ரூபா | | ரூபா |
| **சொத்துக்கள்** | | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | | | | |
| சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 14 | 601,498.19 | | 843,242.19 |
| | | | | |
| | | | | |
| நிலையான வைப்புகள் | | | | |
| நிலையான வைப்புகள் | 9 | 10,000,000.00 | | 10,000,000.00 |
| | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| திறைச் சீலைகள் | | - | | - |
| முன் கொடுப்பனவுகள் | 15 | 25,129.26 | | - |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய சொத்துக்கள் | 8 | 17,827,274.44 | | 5,255,567.80 |
| பணம் மற்றும் பணத்துக்குச் சமமான சொத்துக்கள் | 10 | 550,957.73 | | 198,459.66 |
| | | 18,403,361.43 | | 5,454,027.46 |
| | | | | |
| **மொத்த சொத்துக்கள்** | | 29,004,859.62 | | 16,297,269.65 |
| | | | | |
| **உரிமங்கள் மற்றும் பொறுப்புகள்** | | | | |
| **உரிமங்கள்** | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 11 | 25,000,010.00 | | 25,000,010.00 |
| தங்க வைத்தல் இலாபம் / (நட்டம்) | | 1,967,142.46 | | (11,619,371.38) |
| **உரிமங்கள் மற்றும் பொறுப்புகள்** | | 26,967,152.46 | | 13,380,638.62 |
| | | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | | | |
| | | | | |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | | |
| திரட்டப்பட்ட செலவுகள் | 12 | 2,037,707.40 | | 2,916,630.43 |
| | | | | |
| **மொத்த உரிமங்கள் மற்றும் பொறுப்புகள்** | | 29,004,859.86 | | 16,297,269.65 |
| | | | | |

மேற்குறித்த நிதி நிலைமை தொடர்பான கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் இந் நிதிக் கூற்றுக்களினுள் உள்ளடங்குகின்ற பகுதிகளான பக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக் குறிப்புகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும்.

2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாக நான் சான்றுபடுத்துகின்றேன்.

| | | |
|---|---|---|
| ................................................. | ...................................................... | ............................ |
| முகாமையாளர் - மானிட வளங்கள் மற்றும் நிதி | பிரதம நிறைவேற்று அதிகாரி | தலைவர் |

2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம், இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதும், முன் வைப்பதும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

சபை சார்பாகவும், அது தொடர்பாகவும் அனுமதிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டது.

| | |
|---|---|
| ...................................... | ........................................ |
| பணிப்பாளர் | பணிப்பாளர் |

6.2 2023 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டு காலப் பகுதிக்கான விபரமான வருமானக் கூற்று

| இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி | | | |
|---|---|---|---|
| விபரமான வருமானக் கூற்று | | | |
| **2023 டிசம்பர் 31** | | | |
| | | | |
| | | 2023 | 2022 |
| | **குறிப்புகள்** | **ரூபா** | **ரூபா** |
| வருமானம் | 1 | 27,460,515.67 | 14,030,203.36 |
| | | | |
| **கருத்திட்டங்கள் தொடர்பான நேரடி செலவு** | 2 | (4,143,208.08) | (4,435,591.61) |
| | | | |
| நிகர இலாபம் | | 23,317,307.59 | 9,594,611.75 |
| | | | |
| பிற வருமானங்கள் | 3 | 1,080,136.96 | 832,397.26 |
| | | 24,397,444.55 | 10,427,009.01 |
| **குறைத்தல் :** | | | |
| | | | |
| தனி நபர் செலவு | 4 | 8,550,679.24 | 6,529,800.86 |
| | | | |
| நிர்வாக செலவுகள் | 5 | 2,342,513.01 | 1,361,981.34 |
| | | | |
| விற்பனை மற்றும் விநியோகிப்பு செலவு | 6 | 9,350.00 | - |
| | | | |
| நிதி மற்றும் ஏனைய செலவுகள் | 7 | 12,175.00 | 5,155.00 |
| | | 10,914,717.25 | 7,896,937.20 |
| | | | |
| இலாபம் / (நட்டம்) வரிக்கு முந்திய | | 13,482,727.30 | 2,530,071.81 |
| | | | |
| வரி | | | - |
| | | | |
| இலாபம் / (நட்டம்) வரிக்கு பிந்திய | | 13,482,727.30 | 2,530,071.81 |
| | | | |
| ஏனைய விபரமான வருமானங்கள் | | | - |
| | | | |
| மொத்த விபரமான வருமானங்கள் | | 13,482,727.30 | 2,530,071.81 |

6.3 2023 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியிலிருந்த படியான உரிமம் மாற்றல் கூற்று

| | குறிப்பு | தங்க வைத்தல் இலாபம்/(நட்டம்) ரூபா | கூறப்பட்ட மூலதனம் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|
| | | | | |
| 2023 ஜனவரி 01 ஆரம்ப மீதி | | (14,149,443.19) | 25,000,010.00 | 10,850,566.81 |
| | | | | |
| ஆண்டு இலாப / (நட்டம்) | | 2,530,071.81 | | 2,530,071.81 |
| முன்னைய ஆண்டின் ஒப்பீடு | 13 | 107,780.54 | | 107,780.54 |
| முன்னைய ஆண்டின் ஒப்பீடு - மீதி | | (3,994.00) | | (3,994.00) |
| | | | | |
| 2023 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு மீதி (இறுதி மீதி) | | (11,515,584.84) | 25,000,010.00 | 13,484,425.16 |
| 2023 ஜனவரி 01 ஆந் திகதிக்கு மீதி | | (11,515,584.84) | 25,000,010.00 | 13,484,425.16 |
| | | | | |
| வருடாந்த இலாபம் / (நட்டம்) | **13** | 13,482,727.30 | | 13,482,727.30 |
| | | | | |
| 2023 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு மீதி | | 1,967,142.46 | 25,000,010.00 | 26,967,152.46 |

## 6.4 2023 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருட காலப் பகுதிக்கான நிதியோட்டக் கூற்று

| | | |
|---|---|---|
| இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி | | |
| நிதியோட்டக் கூற்று | | |
| **2023 டிசம்பர் 31** | | |
| | | |
| | 2023 | 2022 |
| | ரூபா . | ரூபா . |
| நிதியோட்டக் கூற்று - முன்னெடுப்பு செயற்பாடுகள் | | |
| வரிக்கு முந்திய நிகர இலாபம் / (நட்டம்) | 13,482,727.30 | 2,530,071.81 |
| | | |
| **ஒப்பீடு** | | |
| தேய்மானம் | 237,750.00 | 80,414.06 |
| **முன்னைய ஆண்டின் ஒப்பீடுகள்** | 107,780.54 | 0 |
| | 13,828,257.84 | 2,610,485.87 |
| **செயன் முறை மூலதன மாறுபாடுகள்** | | |
| அதிகரிப்பு / (குறைவு) மற்றும் பிற கிடைக்க வேண்டியவை | (12,571,707.64) | (1,519,441.30) |
| (அதிகரிப்பு) / (குறைவு) நிதி முகாமைத்துவம் | (25,129.26) | |
| (அதிகப் படி) / (குறைவுகள்) ஏனைய செலுத்த வேண்டியவை | (878,923.03) | (120,534.18) |
| | (13,475,759.93) | (1,639,975.48) |
| | | |
| **நிகர நிதியோட்டம் - முன்னெடுப்பு செயற்பாடுகளின் வாயிலாக** | 352,498.07 | 970,510.39 |
| | | |
| நிதியோட்டக் குறிப்பு - முதலீட்டு செயற்பாடுகள் | | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | - | (826,000.00) |
| நிகர நிதியோட்டம் - முதலீட்டு செயற்பாடுகள் | - | (826,000.00) |
| | | |
| | | |
| அதிகரிப்பு / (குறைவு) பணம் மற்றும் பணத்துக்குச் சமமானவை | 352,498.07 | 144,510.39 |
| | | |
| வருட ஆரம்பத்திலிருந்த படியான பணத் தொகை மற்றும் பணத்துக்குச் சமமானவை | 198,459.66 | 53,949.27 |
| | | |
| வருட இறுதியிலிருந்த படியான பணத் தொகை மற்றும் பணத்துக்குச் சமமானவை | 550,957.73 | 198,459.66 |
| | | |

## 6.5 2023 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில்ருந்த படியான நிதிக் கூற்றுக்கான விபரமான குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி | | | | |
| 2023 டிசம்பர் 31 | | | | |
| நிதிக் கூற்றுக்கான விபரமான குறிப்புகள் | | | | |
| | | | | |
| | | 2023 | | 2022 |
| | | ரூபா | | ரூபா |
| 1 | <u>வருமானம்</u> | | | |
| | பசுமை வீட்டு வாயு சான்றுபடுத்துகை வருமானம் | 13,944,976.75 | | 10,295,212.95 |
| | பயிற்சி மற்றும் பணிப் பட்டறை வருமானம் | - | | 495,080.00 |
| | இலங்கை காபன் கடன் முன் மொழித் திட்ட கருத்திட்ட வருமானம் | 2,243,797.50 | | 2,262,990.41 |
| | மதியுறை சேவைகள் வருமானம் | - | | 976,920.00 |
| | நீர் பாதச் சுவடி வருமானம் | 460,157.25 | | - |
| | பயிற்சி மற்றும் பணிப் பட்டறை வருமானம் | 294,500.00 | | |
| | அறிவு பூர்வமான கருத்திட்டங்கள் | 404,750.00 | | |
| | கருத்திட்ட முகாமைத்துவ வருமானம் | 9,718,261.67 | | |
| | பிற வருமானங்கள் | 394,072.50 | | |
| | | 27,460,515.67 | | 14,030,203.36 |
| | | | | |
| 2 | <u>கருத்திட்டங்கள் தொடர்பான நேரடி செலவு</u> | | | |
| | கருத்திட்ட செலவுகள் - காபன் பாதச் சுவடி குறிப்புகள் | 1,245,691.91 | | 150,000.00 |
| | கருத்திட்ட செலவுகள் - இலங்கை தராதர அங்கீகார சபை சார்ந்த செலவுகள் | 288,000.00 | | - |
| | கருத்திட்ட செலவுகள் - இலங்கை காபன் கடன் முன் மொழிவுத் திட்டம் | 291,575.17 | | - |
| | பயிற்சி மற்றும் பணிப் பட்டறை தொடர்பான செலவுகள் | 299,372.00 | | 92,222.00 |
| | நீர் பாதச் சுவடி செலவுகள் | 115,000.00 | | - |
| | அறிவியல் பூர்வமான கருத்திட்டங்கள் தொடர்பான செலவுகள் | 15,000.00 | | - |
| | கருத்திட்ட செலவுகள் | 1,378,569.00 | | 68,000.00 |
| | வனப் பயிர்ச் செய்கை செலவுகள் | 510,000.00 | | |
| | | 4,143,208.08 | | 4,435,591.61 |
| | | | | |
| 3 | <u>பிற வருமானங்கள்</u> | | | |
| | வட்டி வருமானம் | 1,080,136.96 | | 832,397.26 |
| | | 1,080,136.96 | | 832,397.26 |
| | | | | |

| | | 2023 | | 2022 |
|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா |
| 4 | **தனி நபர் செலவு** | | | |
| | பணிக் குழு சம்பளம் | 4,557,237.10 | | 3,909,360.12 |
| | செலவுகள் - ஊழியர் சேமலாப நிதியம் | 571,322.67 | | 481,800.00 |
| | செலவுகள் - ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 143,359.62 | | 120,450.00 |
| | வாழ்க்கை செலவு | 850,451.61 | | 746,362.50 |
| | சம்பளக் கொடுப்பனவு | 360,500.00 | | 454,109.92 |
| | பதில் கடமையாற்றும் கொடுப்பனவு | 420,260.18 | | - |
| | விசேட கொடுப்பனவு | 300,000.00 | | 300,000.00 |
| | பணி நன்கொடை செலவு | 178,750.00 | | 144,280.82 |
| | தொலைபேசிக் கொடுப்பனவு | 205,306.45 | | - |
| | பிற கொடுப்பனவுகள் | 505,161.29 | | 373,437.50 |
| | வாகனக் கொடுப்பனவு | 225,806.45 | | |
| | எரிபொருள் கொடுப்பனவு | 232,523.87 | | - |
| | | 8,550,679.24 | | 6,529,800.86 |
| | | | | |
| 5 | **நிர்வாக செலவுகள்** | | | |
| | செயலகக் கட்டணம் | 134,108.10 | | - |
| | சட்டக் கட்டணம் | - | | 22,500.00 |
| | காப்புறுதிக் கட்டணம் | 72,539.70 | | 91,071.76 |
| | தொலைபேசிக் கட்டணம் | 124,991.97 | | 156,655.16 |
| | இணையத் தளம் தொடர்பான செலவுகள் | 15,500.00 | | 25,000.00 |
| | தபால் மற்றும் முத்திரைக் கட்டணம் | 6,735.00 | | 14,345.00 |
| | பணிப்பாளர் சபை கொடுப்பனவு | 127,500.00 | | 30,000.00 |
| | எரிபொருள் மற்றும் வாகனப் பராமரிப்பு செலவுகள் | 307,470.00 | | 256,831.00 |
| | கணினி மற்றும் அச்சிடல் இயந்திர பராமரிப்பு செலவுகள் | 112,125.00 | | 199,119.39 |
| | கணக்காய்வுக் கட்டணம் | 182,160.00 | | 182,160.00 |
| | அச்சிடல் மற்றும் காகிதாதி செலவுகள் | 366,650.00 | | 55,424.00 |
| | தேய்மானம் | 237,750.00 | | 80,414.06 |
| | பயணக் கொடுப்பனவு | 19,235.92 | | 28,859.53 |
| | பிற செலவுகள் | 18,275.00 | | 90,540.17 |
| | மொழி பெயர்ப்புக் கட்டணம் | 33,111.87 | | 6,452.25 |
| | வர்த்தக விளம்பர செலவுகள் | 73,140.00 | | 72,688.00 |
| | வெளி நாட்டுப் பயண செலவு | 62,875.00 | | 24,000.00 |
| | ஊழியர் நலன்புரி | 7,225.75 | | 25,921.02 |
| | வருடாந்தப் பலன் | 13,375.70 | | - |
| | சீ எஸ் ஆர் செயற்பாட்டு செலவுகள் | 17,100.00 | | - |
| | வாழ்க்கை காப்புறுதி செலவுகள் | 215,644.00 | | - |
| | பணிக் குழுப் பயிற்சி செலவுகள் | 45,000.00 | | - |
| | நிறைவேற்றுச் சபை செலவுகள் | 75,000.00 | | - |

| | | 2023 | | 2022 |
|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா |
| | கணக்காய்வு முகாமைத்துவக் குழுவிற்கான கொடுப்பனவுச் செலவுகள் | 75,000.00 | | - |
| | | 2,342,513.01 | | 1,361,981.34 |
| | | | | |
| 6 | <u>விற்பனை மற்றும் வி நியோகிப்பு செலவுகள்</u> | | | |
| | விளம்பரச் செலவுகள் | 9,350.00 | | - |
| | | 9,350.00 | | |
| | | | | |
| 7 | <u>நிதி மற்றும் பிற செலவுகள்</u> | | | |
| | வங்கிக் கட்டணங்கள் | 12,175.00 | | 5,155.00 |
| | | 12,175.00 | | 5,155.00 |
| | | | | |
| 8 | **கிடைக்க வேண்டியவை** | | | |
| | கிடக்க வேண்டிய கடன் மீதி | 15,214,503.44 | | 4,458,796.80 |
| | பண முற்பணம் | 2,612,771.00 | | 796,771.00 |
| | | 17,827,274.44 | | 5,255,567.80 |
| | | | | |
| 9 | <u>நிலையான வைப்புகள்</u> | | | |
| | நிலையான வைப்புகள் - இலங்கை வங்கி | 10,000,000.00 | | 10,000,000.00 |
| | | 10,000,000.00 | | 10,000,000.00 |
| | | | | |
| 10 | <u>பணம் மற்றும் பணத்துக்கு சமமானவை</u> | | | |
| | வங்கி மீதி | 550,957.73 | | 198,459.66 |
| | | 550,957.73 | | 198,459.66 |
| | | | | |
| 11 | <u>கூறப்பட்ட மூலதனம்</u> | | | |
| | கூறப்பட்ட மூலதனம் | 25,000,010.00 | | 25,000,010.00 |
| | | 25,000,010.00 | | 25,000,010.00 |
| | | | | |
| 12 | <u>செலுத்த வேண்டியவை</u> | | | |
| | செலுத்த வேண்டிய - ஊழியர் சேமலாப நிதியம் | 306,412.82 | | 983,028.01 |
| | செலுத்த வேண்டிய - ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 125,561.76 | | 191,161.60 |
| | செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் | 367,160.00 | | 367,160.00 |

| | | 2023 | | 2022 |
|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா |
| | செலுத்த வேண்டிய ஈட்டும் போதான வரி | 10,542.00 | | 326,000.00 |
| | செலுத்த வேண்டிய பணி நன்கொடை | 1,228,030.82 | | 1,049,280.82 |
| | | 2,037,707.40 | | 2,916,630.43 |
| | | | | |
| **13** | **முன்னைய ஆண்டின் ஒப்பீடு** | | | |
| | பணி நன்கொடை | - | | 740,000.00 |
| | கணக்காய்வுக் கட்டணம் | - | | (37,500.00) |
| | இலங்கை தராதர அங்கீகார சபை தொடர்பான செலவு | 36,000.00 | | |
| | பணிப்பாளர் சபை செலவுகள் | 7,500.00 | | |
| | கடித பெட்டி செலவுகள் | 5,000.00 | | |
| | எரிபொருள் மற்றும் வாகனப் பராமரிப்பு செலவுகள் | 18,500.00 | | |
| | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 2,025.00 | | |
| | காப்புறுதி | 38,755.54 | | |
| | | 107,780.54 | | 702,500.00 |
| | | | | |
| | | | | |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **14** | **சொத்து, பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள்** | | | |
| | | | | |
| **14.1** | **செலவு / மதிப்பீடு** | | | |
| | | 2023/01/01 ஆந் திகதிக்கு மீதி | மேலதிகம் | 2023/12/31 ஆந் திகதிக்கு மீதி |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| | அலுவலக உபகரணங்கள் | | | |
| | வளிப் பதனாக்கி | 209,000.00 | | 209,000.00 |
| | | | | |
| | பைண்டின் இயந்திரம் | 7,000.00 | - | 7,000.00 |
| | | | | |
| | பிற அலுவலக உபகரணங்கள் | 55,000.00 | - | 55,000.00 |
| | | | | |
| | தளபாடங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் | | | |
| | தளபாடங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் | 525,635.00 | - | 525,635.00 |
| | | | | |
| | **வாகனங்கள்** | | | |
| | மோட்டார் வண்டி | 3,100,000.00 | - | 3,100,000.00 |
| | | | | |
| | மோட்டார் சைக்கிள் | 199,640.00 | | 199,640.00 |
| | | | | |
| | **கணினி உதிரிப் பாகங்கள்** | | | |
| | கணினி மற்றும் அச்சிடல் இயந்திரங்கள் | 1,223,800.00 | 125,000.00 | 1,348,800.00 |
| | | | | |
| | மொத்த சொத்துக்கள் | 5,320,075.00 | 125,000.00 | 5,445,075.00 |
| | | | | |
| 14.2 | **ஒட்டு மொத்த தேய்மானம்** | | | |
| | | 2023/01/01 ஆந் திகதிக்கு மீதி | தேய்மானம் | 2023/12/31 ஆந் திகதிக்கு மீதி |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| | **அலுவலக உபகரணங்கள்** | | | |
| | வளிப் பதனாக்கி | 209,000.00 | - | 209,000.00 |
| | | | | |
| | பைண்டின் இயந்திரம் | 7,000.00 | - | 7,000.00 |
| | | | | |
| | பிற அலுவலக உபகரணங்கள் | 55,000.00 | - | 55,000.00 |
| | | | | |
| | தளபாடங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் | | | |
| | தளபாடங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் | 525,635.00 | - | 525,635.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | **வாகனங்கள்** | | | |
| | மோட்டார் வண்டி | 3,100,000.00 | - | 3,100,000.00 |
| | | | | |
| | மோட்டார் சைக்கிள் | 199,640.00 | - | 199,640.00 |
| | | | | |
| | **கணினி உதிரிப் பாகங்கள்** | | | |
| | கணினி மற்றும் அச்சிடல் இயந்திரங்கள் | 1,223,800.00 | 27,343.75 | 1,251,143.75 |
| | | | | |
| | **மொத்த தேய்மானம்** | 5,320,075.00 | 27,343.75 | 5,347,418.75 |
| | | | | |

## 07. கணக்காய்வு அறிக்கை

தலைவர்,
இலங்கை காலநிலை நிதியம் தனியார் கம்பனி

**இலங்கை காலநிலை நிதியம் தனியார் கம்பனியின் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்புத் தேவை தொடர்பான 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரமான கணக்காய்வு அறிக்கை**

------------------------------------------------------------------------------------------------------------------------

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை காலநிலை நிதியம் தனியார் கம்பனியின் 2023 டிசம்பர் 31 ஆந் திகதியில் இருந்த படியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மாற்றக் கூற்று மற்றும் அன்றுடன் முடிவடைந்த வருட காலப் பகுதிக்கான நிதியோட்டக் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள், சுருக்கமயமான மிக முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் உள்ளடங்கிய 2023 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருட காலப் பகுதிக்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆவது ஏற்பாட்டுடன் திருத்தப்பட்டதாக வாசிக்கப்பட வேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பானையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலைப்பு சட்டத்தின் 154 (6) ஆவது உறுப்புறையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எதிர்வரும் காலப் பகுதியில் எனது அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் எனும் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலமான தாக்கங்களைத் தவிர்த்து, கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2023 டிசம்பர் 31 ஆந் திகதியிலிருந்த படியான நிதி நிலைமை மற்றும் அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றுகை மற்றும் நிதியோட்டம் ஆகியன இலங்கை சிறு அளவிலான மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள் தொடர்பான கணக்கீட்டுத் தராதர நிலைகளின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது கருத்தாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கம்பனியின் பிரதான வருவாய்த் தோற்றுவாயான சேவை வழங்குகையை முன்னெடுக்கையில் பாவனையாளர்களுடன் ஒப்பந்தங்களுக்கு வந்திருப்பதுடன், அவ் ஒப்பங்களின் பிரகாரம் ஒப்பந்த வருமானத்தில் நூற்றுக்கு 40 ஆன விகிதம் அசைவாக்க முற்பணமாகவும் (Mobilization Advance), எஞ்சிய நூற்றுக்கு 60 ஆன வகுதி சேவை சான்றிதழை வழங்குகையிலும் செலுத்த வேண்டியிருப்பதாக குறிப்பிடப்பட்டிருப்பினும், கம்பனியினால் சேவை வழங்குகை வருமானத்தை இனங் காண்கையில் ஒப்பந்தத்துக்கு வரும் சந்தர்ப்பத்தில் மொத்த வருமானமும் அடையாளம் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், 2023 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 27,460,515 ஆன வருமானங்கள் சார்ந்த தெளிவுத் தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. இவ் வருமானத்தில் 2024 டிசம்பர் 09 ஆந் திகதியளவிலும் சேவை வழங்குகை நிறைவு செய்யப்படாத அளவு ரூபா 7,179,662 ஆக

காணப்பட்டது. அதனடிப்படையில், வருமானத்தை அடையாளம் காண்கையில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள் தொடர்பாக கணக்கீட்டுத் தராதர இலக்கம் 23.14 பந்தியின் பிரகாரம் செயற்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

(ஆ) கம்பனிக்கு உரித்தான செலவு ரூபா 5,320,075 ஆன சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களினது வினைத் திறன் மிக்க வாழ் தகவு நிலை முடிவுற்றிருப்பினும், கணக்கீட்டு வருட காலப் பகுதியிலும் அச் சொத்துக்கள் பயன்படுத்தப்பட்ட வண்ணமிருப்பதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதனடிப்படையில், சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள் தொடர்பான கணக்கீட்டுத் தராதர 17 ஆவது பிரிவின் பந்தி இலக்கம் 17.19 இன் பிரகாரம், அச் சொத்துக்களின் வினைத் திறன் மிக்க வாழ் தகவு காலப் பகுதி சரியாக மதிப்பிடப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

(இ) 2021, 2022 மற்றும் 2023 ஆண்டு காலப் பகுதியுடன் தொடர்புடையதாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துவதில் ஏற்பட்ட தாமத நிலை காரணமாக ரூபா 507,700 ஆன தண்டப் பணம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்பான பங்களிப்புத் தொகை செலுத்துவதில் ஏற்பட்ட தாமத நிலை காரணமாக 2021, 2022 மற்றும் 2023 ஜூன் மாதம் வரை ரூபா 64,804 ஆன தண்டப் பணம் செலுத்த வேண்டுமென விதிக்கப்பட்டிருப்பினும், கம்பனியினால் அத் தண்டப் பணத்தை கணக்குகளில் காட்டுவதற்கு அல்லது செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள் தொடர்பான கணக்கீட்டுத் தராதரங்களின் 7.8 ஆவது பிரிவிற்கு முரணாக கம்பனியினால் மறைமுகமாக நிதியோட்டக் கூற்றை தயாரிக்கையில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் வாயிலாக தோற்றம் பெற்ற நிதியோட்டத்தினுள் நிகர இலாபம் அல்லது நட்டத்தை ஒப்பிடுகையில் பணமற்ற வகுதிகளாக ரூபா 178,750 ஆன பணி நன்கொடை ஒதுக்கீட்டின் பெறுமானம் ஒப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள் தொடர்பான கணக்கீட்டுத் தராதர இலக்கம் 29.6 ஆவது பிரிவின் பிரகாரம், கம்பனியினால் வருமானத்தின் கீழ் கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் ரூபா 4,112,708 ஆன வரிச் செலவை அடையாளம் காண வேண்டியிருப்பினும், அவ் வரிப் பொறுப்பு நிதிக் கூற்றுக்களின் வாயிலாக அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கம்பனியினால் கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ரூபா 1,080,137 ஆன வட்டி வருமானத்தை இனங் காண்கையில் அதனுடன் தொடர்புடைய தங்க வைத்தல் வரித் தொகையான ரூபா 56,849 ஆன பணத் தொகை செலவாக அறியப்பட்டு கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) 1958 இன் இலக்கம் 15 ஐ உடைய ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 47 ஆவது பிரிவின் பிரகாரம், ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையை கணிப்பிடுகையிலும், 1980 இன் இலக்கம் 46 ஐ உடைய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையை கணிப்பிடுகையில் ஊழியரது அடிப்படை சம்பளம் மற்றும் அனுமதிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகள் தொடர்பாகவும் கருத்திலெடுக்கப்பட வேண்டும். எனினும், கம்பனியினால் ஆரம்பத்திலிருந்து ஊழியர் நம்பிக்கை மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பை கணிப்பிடுகையில் ஊழயரது அடிப்படை சம்பளம் மாத்திரம் கருத்திலெடுக்கப்பட்டிருந்ததுடன், வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகளும், விசேட கொடுப்பனவு மற்றும் தொலைபேசிக் கொடுப்பனவு போன்ற கொடுப்பனவுகள் கருத்திலெடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனடிப்படையில், கலந்தாலோசிப்பு வருட கால கட்டம் தொடர்பாக மாத்திரம் குறைவாகக் கணிப்பிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை முறையே ரூபா 270,566 மற்றும் ரூபா 40,286 ஆகக் காணப்பட்டது.

(ஏ) கம்பனியினால் கணக்கீட்டுத் தராதர கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வாராக் கடன் மற்றும் அறவிட முடியாக் கடன் தொடர்பாக கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இல.கண.நிய) இசைவாக எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புகள் இவ் அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 கம்பனியின் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பிற்பாடு எனக்கு கையளிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்ற கம்பனியின் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள எனினும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் கீழ் எடுத்துறைக்கப்பட்டுள்ளன. இவ் ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்பு கூற வேண்டியுள்ளது.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன், அது தொடர்பாக நான் எவ்விதத்திலும் சான்றுபடுத்துகையோ அல்லது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தையோ முன் வைக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுடன் தொடர்புடையதாக எனது பொறுப்பாக மேற்குறித்த அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தில் வாசித்தல் மற்றும் அத்தகைய அடிப்படையில் செயற்படுகையில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது ஏனைய விதமாக பெறப்பட்ட எனது அறிவின் பிரகாரம் போதியளவில் பொருந்தாதிருக்கின்றதா என்பதைக் கருத்திலெடுப்பதாகவுள்ளது.

கம்பனியின் 2023 வருடாந்த அறிக்கையை வாசிக்கையில், அதன் பெறுமதி ரீதியான பிழைகள் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதாக நான் கருதுமிடத்து, சரிப்படுத்தல்கள் தொடர்பாக நிர்வகிக்கின்ற தரப்பினருடன் அவ் விடயங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டியுள்ளது. மேலும் சரி செய்யப்படாத பிழையாக குறிப்பிடப்பட்ட விடயங்கள் காணப்படுமாயின், அவற்றை அரசியலமைப்பின் 154 (6) சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் காலப் பகுதியில் என்னால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவம் மற்றும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிக செயற்பாடுகள் தொடர்பான கணக்கீட்டுத் தராதரங்களின் பிரகாரம் தயாரித்து சரியாகவும், நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன் முறையை பரீட்சிக்கும் பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பாகக் காணப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகளையும், அறிக்கைகளையும் சீராகப் பராமரிக்க வேண்டியுள்ளது.

## 1.5 நிதிக் கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக் கொள்வதும், எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கல் இருக்க தனியாகவோ கூட்டாகவோ தாக்களிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, துறை சார் வெளிப் படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங் கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர் கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல், மோசடியானது கூட்டுச் சதி, கள்ளத் தனம், வேண்டுமென்று விட்டு விடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டிபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற் திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பாகவும், குறிப்பிடத்தக்க ஐயப்பாடிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவுக்கு வந்தால் அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவில் காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கையின் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட

கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்க்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக் குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடை நிறுத்துவதற்கு ஏதுவாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல், வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட கணக்காய்வுக் கண்டறிவுகள், பிரதான உள்ளக நிர்வாகக் குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வாகத் தரப்பினரை அறிவூட்டுகின்றேன்.

## 2. ஏனைய சட்ட திட்டங்கள் மற்றும் கண்காணிப்பு தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தினதும், 2007 இன் இலக்கம் 7 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் கீழும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் தொடர்பாக விசேட நிதியங்கள் உள்ளடங்குகின்றன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலமான தாக்கங்களைத் தவிர்த்து, 2007 இன் இலக்கம் 7 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் 163 (2) பிரிவிலும், 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவிலும் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும், விளக்கங்களும் என்னால் பெறப்பட்டதுடன், எனது பரீட்சிப்பின் மூலம் அடையாளம் காணப்பட்ட விடயங்களின் பிரகாரம் கம்பனி கணக்காய்வு அறிக்கைகளை சீராகப் பேணியிருந்தது.

2.1.2 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசையக் கூடியதாகக் காணப்படுகின்றது.

2.1.3 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவின் கீழான 1.2. (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர முன்னைய ஆண்டில் என்னால் முன் வைக்கப்பட்ட பரிந்துறைகள் முன் வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயன் முறைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சியங்களின் பிரகாரம் அவை போதியளவான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டமையால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை முன் வைப்பதற்குப் போதியளவான விடயங்கள் எனது கண்காணிப்பிற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கம்பனியின் நிர்வாக சபையின் ஏதாவதொரு அங்கத்தவரொருவருக்கு கம்பனியுடன் தொடர்புபட்டு ஏதாவதொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது எந்தவொரு பிற அடிப்படையிலும் சாதாரண வர்த்தக நிலைகளுக்குப் புறம்பாக தொடர்பு காணப்படுவதாக.

2.2.2 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர ஏதாவதொரு தொடர்புடைய எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட பிரிதொரு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு ஒத்திசையாகாத அடிப்படையில் செயற்பட்டிருப்பதாக.

| சட்ட திட்டங்கள் / ஆணைகளினது குறிப்பு | | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | 2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டம் | |
| (i) | 131 (1) பிரிவு | ஒவ்வொரு கம்பனியும் சட்டத்தின் ஐந்தாவது உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியினது கூறப்பட்ட மூலதனம், கம்பனியினால் வெளியிடப்பட்டுள்ள மொத்தப் பங்குகளின் எண்ணிக்கை, இழக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை, கம்பனி கூட்டுத்தாபனமாக்கப்பட்ட திகதி மற்றும் அலுவலக முகவரி போன்ற விடயங்கள் உள்ளடங்கிய வருடாந்த அறிக்கையை, நடப்பு செயன் முறைகளின் பிரகாரம் வருடா வருடம் குறித்த ஆவணப் படிவத்தில் பதிவாளர் நாயகத்துக்கு கையளிக்க வேண்டியிருப்பினும், கம்பனியினால் 2020 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு அத்தகைய அறிக்கைகள் முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 223 (1) பிரிவு | ஒவ்வொரு கம்பனியும் அதன் பணிப்பாளர்கள் மற்றும் செயலாளர்களினது நடப்புப் பெயர்கள் மற்றும் குடும்பப் பெயர்கள், வதிவிடத்தின் முகவரி மற்றும் தொழில் போன்ற தகவல்கள் உள்ளடங்கிய ஆவணமொன்றை அதன் பதிவு அலுவலகத்தில் அல்லது 116 ஆவது பிரிவின் கீழ் பதிவாளார் நாயகத்துக்கு அறிவிக்கப்படக் கூடிய பிற ஏதாவதொரு இடத்தில் வைப்பிலிட வேண்டியிருப்பினும், கம்பனியினால் அத்தகைய ஆவணமொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2017 இன் இலக்கம் 24 ஐ உடைய உள் நாட்டு வருமான சட்டத்தின் 93 (1) பிரிவு | ஒவ்வொரு மதிப்பீட்டு வருட இறுதிக்குப் பிற்பாடும், 08 மாத காலப் பகுதிக்கு மேற்படாத காலப் பகுதியில் அம் மதிப்பீட்டு வருட காலப் பகுதி தொடர்பாக வருமான அறிக்கையொன்று உள் நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கு ஆவணப்படுத்த வேண்டியிருப்பினும், கம்பனியினால் 2023 ஆம் ஆண்டு காலப் பகுதி |

| | | |
|---|---|---|
| | | தொடர்பான வருமான அறிக்கை 2024 ஒக்டோபர் 10 ஆம் திகதியளவிலும் உள் நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கு ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | அரச வணிக திணைக்களாத்தின் 2022 ஜனவரி 28 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 02/2022 ஐ உடைய சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிறைவேற்று ரீதியற்ற பதவிகளுடன் தொடர்புடையதாக ரூபா 166,306 ஆன பணத் தொகை கலந்தாலோசிப்பு வருட காலப் பகுதியில் தொலைபேசிக் கட்டணமாக பெறப்பட்டிருந்தது. |
| (ஈ) | அரச வணிகத் திணைக்களத்தின் 2021 டிசம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 ஐ உடைய சுற்றறிக்கை | |
| (i) | வழிகாட்டி இலக்கம் 2.3 | கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கூட்டுத் திட்டத்துடன் செயலாற்றுகைத் திட்டம், வருடாந்த பாதீட்டு ஆவணம் ஆகியன சமாந்தர நிலை அமைச்சின் செயலாளர் மற்றும் அரச வணிகத் திணைக்களத்தின் பணிப்பாளர் சபைக்கு முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | வழிகாட்டி இலக்கம் 4.2. (h) | கணக்காய்வு குழு 3 மாதத்துக்கொருமுறையேனும் நடாத்தப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருப்பினும், 2023 ஆம் ஆண்டில் இரண்டு கணக்காவு குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. |
| (iii) | வழிகாட்டி இலக்கம் 6.6 | வரைவுபடுத்தப்பட்ட வருடாந்த அறிக்கை மற்றும் இறுதிக் கணக்குகள் நிதி வருடம் நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன் வைக்க வேண்டியிருப்பினும், கம்பனியினால் கலந்தாலோசிப்பு வருடத்தின் இறுதிக் கணக்கு குறித்த நாளுக்கு 07 மாதங்கள் தாமதமாக, அதாவது 2024 செப்டம்பர் 03 ஆந் திகதி முன் வைக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iv) | முன்னெடுப்புக் கையேடு பந்தி இலக்கம் 2 | முன்னெடுப்புக் கையேடு பந்தி இலக்கம் 2 இன் பிரகாரம் கம்பனியினால் முன்னெடுப்புத் தொகுதி மற்றும் நிர்வாக செயன் முறை நிலை நாட்டப்பட்டிருக்கவில்லை. |
| (v) | முன்னெடுப்புக் கையேடு பந்தி இலக்கம் 7.3 | கம்பனியின் பணிப்பாளர் சபையினால் முதல் நிலை செயலாற்றுகை சுட்டி (KPI) அனுமதிக்கப்பட்டு செயலாற்றுகை திட்டம் மற்றும் பாதீட்டுடன் காலத்துக்கேற்ப பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| (vi) | முன்னெடுப்புக் கையேடு பந்தி இலக்கம் 7.4 | கம்பனியின் பௌதீக மற்றும் நிதி விருத்தி, குறித்த பணிக்கான மூலதனம், நிதியோட்டம், திரவத் தன்மை மட்டம் மற்றும் கடன் நிலைப்பாடு (Debt Position) ஆகிய விடயங்களுடன் தொடர்புடைய அறிக்கைகள் பணிப்பாளர் சபையினால் மாதாந்தம் பரீட்சிக்கப்பட வேண்டியிருப்பினும், கம்பனியினால் அவ் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் கம்பனியின் அதிகாரங்கள், செயற் பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இசைவாகாத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக.

2.2.4 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் குறித்த காலப் பகுதிகளில் கம்பனியின் வளங்களை மிகச் சிக்கனமாகவும், வினைத் திறன் மிக்கதாகவும் மற்றும் முனைப்புடனும் தொடர்புடைய சட்ட திட்டங்களுக்கு ஏற்ப பெறுகை செயற்பாடு பின்பற்றப்பட்டு பெற்றுக் கொள்ளப்படவில்லையென.

2.3 பிற விடயங்கள்

கம்பனியினால் ரூபா 2,500,000 ஆன செலவாக மதிப்பிடப்பட்டிருந்த சுற்றாடல் அமைச்சுக்கு உரித்தான கெப் வண்டியொன்று 2012 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டிருப்பினும், கணக்காய்வு திகதி வரையும் அவ் வண்டி கம்பனிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்/ டப்ளியு. பீ. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி